வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் –நாராயணசாமி

தேதி 25.01.2025 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

நாட்டின் 76ஆவது குடியரசு தின விழா நாளை கொண்டாடப்பட உள்ள நிலையில், குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு இன்றிரவு நாட்டு மக்களுக்கு உரையாற்ற உள்ளார்.

15ஆவது தேசிய வாக்காளர் தினம் இன்று கொண்டாடப்படுவதை ஒட்டி, புதுடெல்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு பங்கேற்று உரையாற்றினார்.

இந்தியா - இந்தோனேஷியா இடையே, இன்று சுகாதார ஒத்துழைப்பு, உள்ளிட்ட பல்வேறு துறைகளில் ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின.

வரும் ஜூன் மாதத்திற்குள் 360க்கும் மேற்பட்ட துடிப்பான கிராமங்களில், 4ஜி இணைப்பு வழங்கப்படும் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

-----------------------------

முர்மு (6)

நாட்டின் 76ஆவது குடியரசு தின விழா, நாளை கொண்டாடப்பட உள்ளது. இதனையொட்டி, குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, நாட்டு மக்களுக்கு இன்றிரவு 7 மணிக்கு, உரையாற்றுகிறார். அவரது இந்த உரையை ஆகாஷ்வாணியின் அனைத்து அலைவரிசைகளிலும் ஒலிபரப்பக் கேட்கலாம். தொடர்ந்து, ஆகாஷ்வாணியின் பிராந்திய மொழிகளில் இரவு 9.30 மணிக்கு ஒலிபரப்பாகிறது.

-----------------------------

*முர்மு-விருது* (13)

நாட்டின் 76ஆவது குடியரசு தினவிழா நாளை கொண்டாடப்படுகிறது. இதனையொட்டி தலைநகர் புதுடெல்லியில் நடைபெறும் இந்நிகழ்ச்சியில்,குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, தேசிய கொடியை ஏற்றி வைத்து உரையாற்ற உள்ளார். இந்நிலையில், காவல் துறை மற்றும் தீயணைப்புத் துறையில் சிறப்பாக பணியாற்றிவர்களுக்கு, குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, விருதுகளை அறிவித்துள்ளார். ஒவ்வொரு ஆண்டும் குடியரசு தினவிழா அன்று, காவல் துறை, தீயணைப்புத் துறையில் சிறப்பாக பணியாற்றும் வீரர்களுக்கு குடியரசுத் தலைவர் விருது வழங்கப்பட்டு வருகிறது. அந்த வகையில் இந்த ஆண்டு, குடியரசு தினத்தையொட்டி, காவல் துறையில் சிறப்பாக செயல்படும் காவலர்களுக்கு, வீர தீர செயல்களுக்கான விருது, மிக சிறப்பாக செயல்படுபவர்களுக்கான விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. இதன்படி நாடு முழுவதும் பல்வேறு மாநிலங்களில் சிறப்பாக செயல்படும் 746 பேருக்கான விருதுகள் மற்றும் பதக்கங்களை குடியரசுத் தலைவர் அறிவித்துள்ளார். இந்த விருதுகள் மற்றும் பதக்கங்கள், நாளை புதுடெல்லியில் நடைபெறும் குடியரசு தினவிழாவில் அவர்களுக்கு வழங்கப்படும்.

-----------------------------

*புதுச்சேரி-குடியரசு தினவிழா* (17)

நாட்டின் 76ஆவது குடியரசு தினவிழா நாளை கொண்டாடப்படுகிறது. இதனையொட்டி புதுச்சேரியில், நாளைக் காலை, கடற்கரை காந்தி திடலில் நடைபெறும் நிகழ்ச்சியில் துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ் நாதன், தேசிய கொடியை ஏற்றி வைத்து, காவலர்களின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொள்கிறார். தொடர்ந்து, பல்வேறு துறைகளில் சாதனை படைத்தவர்களுக்கு விருதுகள் மற்றும் பரிசுகளை வழங்க உள்ளார். பின்னர், காவலர்கள், தீயணைப்புப் படையினர், முன்னாள் ராணுவத்தினர், தேசிய மாணவர் படையினர், அரசு மற்றும் தனியார் பள்ளிமாணவ-மாணவியரின் அணிவகுப்பையும் அவர் பார்வையிட உள்ளார். தொடர்ந்து அரசுத்துறைகளின் சாதனைகளை விளக்கும் அலங்கார வண்டிகளின் அணிவகுப்பையும் அவர் பார்வையிட உள்ளார். நிகழ்ச்சியில் முதலமைச்சர் திரு. ரங்கசாமி, மற்றும் அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், அரசுத் துறை செயலர்கள் மற்றும் அதிகாரிகள், பங்கேற்க உள்ளனர். கடற்கரை காந்தித் திடலில், நிகழ்ச்சி நிறைவடைந்ததும் முதலமைச்சர் திரு. ரங்கசாமி, சட்டசபை வளாகத்தில் தேசிய கொடியை ஏற்றி வைத்து மரியாதை செலுத்த உள்ளார். இவ்விழாவை ஒட்டி புதுச்சேரியில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளன.

------------------------------

*வாக்காளர் தினம் 1 (15)*

15ஆவது தேசிய வாக்காளர் தினம் இன்று கொண்டாடப்படுகிறது. இதனையொட்டி, புதுடெல்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு பங்கேற்று உரையாற்றினார். உலகின் மிகப் பெரிய பன்முகத் தன்மை கொண்ட நாடு இந்தியா என்றும், ஜனநாயகத்தின் தாயாக இந்தியா விளங்குகிறது என்றும் அவர் தெரிவித்தார்.

15ஆவது வாக்காளர் தினத்தை ஒட்டி, பிரதமர் திரு. நரேந்திர மோடி வெளியிட்டுள்ள சமூக வலை தளப் பதிவில், வாக்களிக்கும் உரிமையை வழங்கி, ஒவ்வொரு குடிமகனையும் அதிகாரமிக்கவர்களாக மாற்றும் தினம் தேசிய வாக்காளர் தினம் என குறிப்பிட்டுள்ளார்.

தேசிய வாக்காளர் தினத்தை ஒட்டி, தலைமைத் தேர்தல் ஆணையர் திரு.ராஜீவ் குமார் வெளியிட்டுள்ள செய்தியில், ஜனநாயக உணர்வுக்கு மதிப்பளிக்கும் ஒரு வாய்ப்பாக இந்த தினம் கொண்டாடப்படுகிறது என தெரிவித்துள்ளார். தேர்தல் ஆணையம் 75 ஆண்டுகளை நிறைவு செய்துள்ள நிலையில், இந்த ஆண்டு தேசிய வாக்காளர் தினம் ஒரு சிறப்பு மிக்க நிகழ்வாக நடைபெறுகிறது என்றும் அவர் தெரிவித்தார். 2024ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில், 64 கோடியே 60 லட்சம் வாக்காளர்கள் வாக்களித்தது, உலக அளவில் ஒரு பெரும் வரலாற்று சாதனை என்றும் அவர் பெருமிதம் தெரிவித்தார்.

*வாக்காளர் தினம்* 2 (4)

மத்திய தகவல்-ஒலிபரப்பு மற்றும் நாடாளுமன்ற விவகாரங்கள் துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் விடுத்துள்ள செய்தியில், தேசிய வாக்காளர் தினத்தில் நமது ஜனநாயகத்தின் வலிமையையும், வாக்கின் வலிமையையும், கொண்டாடுவோம் என குறிப்பிட்டுள்ளார்.

------------------------------

*அமித் ஷா – கலந்துரையாடல்* (8)

வரும் ஜூன் மாதத்திற்குள் 360க்கும் மேற்பட்ட துடிப்பான கிராமங்களில், 4ஜி இணைப்பு வழங்கப்படும் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார். 76ஆவது குடியரசு தினம் நாளை கொண்டாடப் படுவதை ஒட்டி, புதுடெல்லியில், துடிப்பான கிராமங்களில் இருந்து வருகை புரிந்துள்ள சிறப்பு விருந்தினர்களுடன் அவர் கலந்துரையாடினார். மேலும் துடிப்பான கிராமங்கள்,

சுகாதார உள்கட்டமைப்பு, கலாச்சாரம், சுற்றுலா, வாழ்க்கைத் தரம், பொருளாதார வளர்ச்சி ஆகியவற்றை கொண்டிருக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

------------------------------

*இந்தியா-இந்தோனேஷியா 1* (17)

4 நாள் அரசு முறைப் பயணமாக இந்தியா வந்துள்ள இந்தோனேஷிய அதிபர் திரு. பிரபோவோ சுபியாண்டோவுடன், பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று, முக்கிய பேச்சு வார்த்தை நடத்தினார். இந்தியா மற்றும் இந்தோனேஷியா இடையே, சுகாதார ஒத்துழைப்பு, பாரம்பரிய மருத்துவம், கடல்சார் பாதுகாப்பு, மற்றும், பாதுகாப்பு, கலாச்சார பரிமாற்றம், டிஜிட்டல் மேம்பாடு ஆகிய துறைகளில் ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின. தொடர்ந்து இந்தியா-இந்தோனேஷியா தலைமை நிர்வாக அதிகாரிகளின் அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட்டது. இந்த பேச்சு வார்த்தைக்கு பின்னர், பிரதமர் திரு. நரேந்திர மோடி தனது செய்திக் குறிப்பில், இந்தோனேஷியா அதிபர் திரு. பிரபோவோ சுபியாண்டோவுடன் தூதுக் குழு அளவிலான பேச்சு வார்த்தைகள் சுமூகமாக நடைபெற்றதாக தெரிவித்தார். மேலும், பாதுகாப்புத் துறையில் ஒத்துழைப்பை மேம்படுத்த, இந்தியாவும், இந்தோனேஷயாவும் இணைந்து செயல்பட முடிவு செய்துள்ளதாக, அவர் கூறினார். கடல்சார் பாதுகாப்பு, சைபர் பாதுகாப்பு, பயங்கரவாத எதிர்ப்பு மற்றம் தீவிரவாத ஒழிப்பு ஆகியவற்றில் இரு நாடுகளும் ஒத்துழைப்பை வலியுறுத்தி உள்ளதாக பிரதமர் தெரிவித்தார். ஃபின்டெக் செயற்கை நுண்ணறிவு, தகவல்

*இந்தியா-இந்தோனேஷியா 2* (3)

தொழில்நுட்பம், மற்றும், டிஜிட்டல் உள்கட்டமைப்பு போன்ற துறைகளில் பரஸ்பர ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்தி இருநாடுகளும் முடிவு செய்துள்ளதாக பிரதமர் தெரிவித்தார்.

-----------------------------

*ஸ்டார்ட் அப் இந்தியா* (9)

இந்தியாவில், புதுமையான கண்டுபிடிப்பு மற்றும் தொழில் முனைவோர்களை ஊக்குவிக்கவும், அவர்களுக்கு தேவையான அனைத்து வசதிகளையும் உள்ளடக்கிய ஒரு சுற்றுச் சூழல் அமைப்பை உருவாக்கும் வகையிலும் மத்திய அரசால் கொண்டு வரப்பட்ட திட்டம்தான் ஸ்டார்ட்-அப் இந்தியா திட்டம். இத்திட்டத்தின் மூலம், புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் ஸ்டார்ட்-அப் நிறுவனங்களை தொடங்கி உள்ளவர்களில் சிலரை தேர்வு செய்து, புதுடெல்லியில் நடைபெறும் குடியரசு தினவிழாவில் பங்கேற்க மத்திய அரசு அழைப்பு விடுத்துள்ளது. இவர்களில் ஒருவரான திரு. மேகவர்ணன் எமது செய்தியாளரிடம் கூறுகையில்.....

(வாய்ஸ்)

------------------------------

*அறிவியல் கண்காட்சி (5)*

புதுச்சேரியில் கடந்த 21ஆம் தேதி முதல் நடைபெற்று வந்த தென்னிந்திய அறிவியல் கண்காட்சி, இன்று நிறைவடைந்தது. இந்நிகழ்ச்சியில், கல்வித்துறை அமைச்சர் திரு. நமச்சிவாயம் சட்டப் பேரவைத் தலைவர் திரு. செல்வம் ஆகியோர் பங்கேற்று, கண்காட்சியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளையும், கேடயங்களையும் வழங்கினார்.

------------------------------

*குறை தீர்ப்பு முகாம்* (15)

புதுச்சேரியில் காவல் துறை முதுநிலை கண்காணிப்பாளரின் அறிவுறுத்தலின்படி இன்று, புதுச்சேரியில் உள்ள பல்வேறு காவல் நிலையங்களில் மக்கள் குறை தீர்ப்பு நாள் நடத்தப்பட்டது. இந்த குறை தீர்ப்பு முகாமில், பொது மக்களின் குறைகளை உடனுக்குடன் நிவர்த்தி செய்வதற்கும், புகார்களுக்கு உடனடி தீர்வு காண்பதற்கும், காவல் துறை மூத்த அதிகாரிகள் தீவிரமாக செயல்பட்டனர். இந்த முகாமில், காவல் துறை மூத்த அதிகாரிகள் நேரில் கலந்து கொண்டு 84 புகார்களை, பொது மக்களிடம் இருந்து பெற்று, அதில் 60 புகார்களுக்கு உடனடியாக நடவடிக்கை எடுத்தனர். இன்று நடைபெற்ற குறை தீர்ப்பு முகாமில் மொத்தம் 248 பேர் பங்கேற்றனர். நிலுவையில் உள்ள புகார்களுக்கு, விரைவாக நடவடிக்கை எடுப்பதாக காவல் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இந்த நிகழ்ச்சி, வரும் காலங்களில் ஒவ்வொரு சனிக்கிழமையன்று காலை 11 மணி முதல், பிற்பகல் 1 மணி வரை, நடைபெறும் என காவல் துறை முதுநிலை கண்காணிப்பாளர் திரு. கலைவாணன் செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவித்துள்ளார்.

------------------------------

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

நாட்டின் 76ஆவது குடியரசு தின விழா நாளை கொண்டாடப்பட உள்ள நிலையில், குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு இன்றிரவு நாட்டு மக்களுக்கு உரையாற்ற உள்ளார்.

15ஆவது தேசிய வாக்காளர் தினம் இன்று கொண்டாடப்படுவதை ஒட்டி, புதுடெல்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு பங்கேற்று உரையாற்றினார்.

இந்தியா - இந்தோனேஷியா இடையே, இன்று சுகாதார ஒத்துழைப்பு, உள்ளிட்ட பல்வேறு துறைகளில்  ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின.

வரும் ஜூன் மாதத்திற்குள் 360க்கும் மேற்பட்ட துடிப்பான கிராமங்களில், 4ஜி இணைப்பு வழங்கப்படும் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.